1994 ஏப்ரல் 27]

பின்தங்கிய வட்டமாக அறிவித்து அங்கே தொழில்களைத் தொடங்க அரசு முன்வருமா என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 113 வட்டங்களில் 31 வட்டங்கள் மிகவும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மீதியுள்ள வட்டங்கள் பின்தங்கிய வட்டங்கள். இதில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 7 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களாகவும், ஒரு வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மிகவும் பின்தங்கிய வட்டம் பள்ளிப்பட்டு, பின்தங்கிய வட்டங்கள் ஊத்துக்கோட்டை, பொன்னேரி, காஞ்சிபுரம், திருத்தணி, செய்யார், மதுராந்தகம், உத்திரமேரூர். பின்தங்கிய வட்டங்களுக்கு அரசு அளிக்கிற சலுகைகள் என்னவென்றால் மூலதன உதவித் தொகையாக ரூபாய் 15 இலட்சம் சலுகையாக அளிக்கப்படுகிறது. அதாவது மூலதனத்தில் 15 சதவீதம், அதிகபட்சம் 15 இலட்சம் ரூபாயை மூலதன உதவித் தொகையாக அரசு அளிக்கிறது. அதைப்போல விற்பனை வரி செலுத்துவதை 9 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கிறோம். மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கு 20 சதவீதம் மூலதன உதவித் தொகை வழங்கப்படுகிறது. அந்தத் தொகை 20 இலட்சத்திற்கு மேற்படாமல் இருக்கும். விற்பனை வரியைப் பொறுத்தவரையில் 5 ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்கிறோம் அல்லது 9 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 410, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

410—

சேலம் மாவட்டத்தில் அரசு தொட்டில்களில் போடப்பட்டுள்ள குழந்தைகளைப் பராமரித்தல்

*** 20307**—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை குழந்தைகள் அரசு தொட்டில்களில் போடப்பட்டுள்ளன?

TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 27

(ஆ) அவைகளைப் பராமரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 85 குழந்தைகள் தொட்டிலில் போடப்பட்டன. அதில் 67 குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றன. 10 குழந்தைகளை பெற்றோர்களே வந்து திரும்பப் பெற்றுக்கொண்டனர். பிறந்தபோதே நலிவுற்று இருந்ததால் 8 குழந்தைகள் மரணம் அடைந்திருக்கின்றன. இந்தத் தொட்டில் குழந்தைகளைப் பராமரிக்க மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 8 குழந்தைகள் இறந்துவிட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தொட்டிலில் போடப்பட்டவுடன் குழந்தைகள் இறக்காமல் இருக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குழந்தைகள் தொட்டிலுக்கே வராமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 8 குழந்தைகளும் பிறக்கும்போதே ஊனமுற்றும், மன வளர்ச்சி இல்லாமலும், கண்களை இழந்தும் மிகவும் நலிவுற்ற முறையில் பிறந்த அவைகள் ஒரு கண்ணாடிப் பேழையில் வைத்துப் பராமரிக்கப்பட்டும்கூட அதற்குப் பின்னாலே அந்தக் குழந்தைகள் மருத்துவமனையில் இறந்து விட்டன. மற்ற 67 குழந்தைகள் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு, அவைகள் தமிழகத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் செல்லக் குழந்தைகளாகப் பராமரிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டிலில் போடப்படுகின்ற குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுகின்றபோது அவர்களை எந்த ஜாதியில் சேர்த்துக்

1994 ஏப்ரல் 27]

கொள்வார்கள் என்பதையும், அவர்கள் படித்து முடித்த பிறகு அவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும், தொட்டிலில் போடப்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் திரும்ப எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின் பேரில் சமூக நலத் துறை செய்திருக்கின்ற மிகத் தீவிரமான பிரச்சாரத்தின் காரணமாக 10 குழந்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள பெற்றோர்கள் கேட்டிருந்தனர். அதை சமூக நலத் துறை அனுமதித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று அந்தக் குழந்தைகளுக்கு எந்த சாதி வைக்கப்படும் என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் குழந்தைகள் தொட்டிலுக்கு வருகிறபோதே அதை ஆலோசித்து — இதுவரை எந்த முதலமைச்சரும் இப்படி ஆலோசனை செய்து நடவடிக்கை எடுத்திருக்க முடியாது. ஆனால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அப்படி எடுத்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைக்கு ஒரு தாயை நியமித்து அந்தத் தாயிடம் அளித்திருக்கிறார்கள். தாய் தந்தை இருக்கின்ற குடும்பத்தில் அண்டு S.O.S. என்று சொல்லப்படுகின்ற திட்டத்தின் கீழ் அந்தக் குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். அந்தத் தாய், தந்தை என்ன சாதியோ அந்தச் சாதியே அந்தக் குழந்தையின் பிற்காலத்திலே வழங்கப்படும். தாய், தந்தை இல்லாமல் எந்தக் குழந்தையும் வளர்க்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அதற்காக இந்த பட்ஜெட்டிலே கூட, இந்த மானியக் கோரிக்கையின்போது இந்தக் குழந்தைகளுக்கும் 5,000 ரூபாய் டெப்பாசிட் செய்யப்படும் என்ற ஒரு திட்டத்தை விரிவுபடுத்தி இருக்கிறோம். எங்களுடைய சமூக நலத் துறையின் சார்பாக அந்தக் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த நிதியினை அந்தக் குழந்தைகளின் பெற்றோர்களிடத்திலே கொடுத்து அந்தக் குழந்தைகள் சரியாகப் பராமரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டில் குழந்தைகள் திட்டத்தை தமிழ்நாடு மட்டும் அல்ல, இந்தியாவே

பாராட்டுகின்ற இந்த வேளையிலே அந்தக் குழந்தைகள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியிலும், அன்பிலும் இன்று 'ஜேஜே' என்று வாழ்ந்து கொண்டும், வளர்ந்து கொண்டும் வருகின்ற இந்த நேரத்தில் அவர்கள் பெயரிலே 5,000 ரூபாய் டெப்பாசிட் போடுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளை சில பணக்காரர்கள் தத்தெடுத்துக் கொண்டால் அந்த டெப்பாசிட் தொகை குழந்தையின் பெயரிலே இருக்குமா அல்லது பாதுகாப்பாளர்/ கண்காணிப்பாளர் பெயரில் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் கையில் குழந்தை வளர்கிறது என்பது அல்ல. அந்தக் குழந்தையின் பெயரிலேதான் அந்த டெப்பாசிட் பணம் போடப்படுகிறது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் குழந்தைதான் அந்தப் பணத்தை எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொட்டிலில் போடப்படுகிற அன்றிலிருந்தே டெபாசிட் அந்தக் குழந்தையின் பெயரில் போடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொட்டில் குழந்தைகள் பராமரிப்புக்காக தனியாரிடமிருந்து ஏதாவது நிதி பெறப்படுகிறதா? ஒருவர் ஒரு குழந்தையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பராமரிப்பதற்கு ஆகும் செலவை ஏற்க முன்வந்தால் அதை அரசு ஏற்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டில் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசு முடிவு எடுத்தபோதே தன்னார்வம் மிக்க, தொண்டுள்ளம் கொண்டவர்கள் ஏறக்குறைய 2.70 லட்சம் ரூபாயை அரசாங்கத்திற்கு நன்கொடையாக அளித்திருக்கிறார்கள். அதிலே 1.30 லட்சம் ரூபாயை அரசு கூர்நோக்கு இல்லங்களுக்கும், தன்னார்வ நிறுவனங்களுக்கும், பராமரிப்பு இல்லங்களுக்கும் ஒதுக்கியிருக்கிறது. நிதி நெருக்கடியிலும் தொடர்ந்து அரசு இந்தக் குழந்தைகளுக்கு செலவு செய்கிறது. இப்போது பல்வேறு கம்பெனிகள், 'கிளாக்ஸோ' போன்ற மிகப் பெரிய கம்பெனிகள் அந்தக் குழந்தைகளுக்கு உணவுப் பொருட்களை அனுப்பி வைக்கிறார்கள். அவர்களுடைய வளர்ச்சிக்கான திடகாத்திரமான உணவுப் பொருட்களை அவர்கள் அனுப்பி வைக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அரசு தொட்டிலிலே போடப்படும் குழந்தைகளை அவர்கள் பெற்றோர்களிடம் திருப்பி வழங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் ஒரு தம்பதியர், அவர்கள் மாம்பலத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்கு 65 வயது ஆகிறது, அவர்களுக்குக் குழந்தை இல்லை என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் குழந்தை வேண்டுமென்று சொன்னால் இந்த அரசு தொட்டிலில் விடப்பட்ட குழந்தைகளில் ஏதாவது ஒன்று அழகான நிலையில் இருந்தால் அவர்கள் நிச்சயமாக எடுத்துக்கொண்டு சென்று வளர்க்கிறேன் என்று உறுதி மொழி கொடுக்கிறார்கள் என்றால் அதற்கு இந்த அரசு முன்வருமா அல்லது சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குழந்தைகளை எடுத்து வளர்ப்பதற்கு முன் வரக்கூடியவர்கள் அழகு இருக்கிறதா, இல்லையா என்றெல்லாம் பார்க்காமல் ஒரு தியாகத் தன்மையோடு முன்வர வேண்டுமென்பதைத்தான் புரட்சித் தலைவி அவர்கள் விரும்புகிறார்கள். அந்தக் குழந்தைகளை எடுத்துச் செல்லக்கூடியவர்கள் தங்களுடைய சொந்தக் குழந்தைகளாகப் பராமரிக்கக்கூடிய அளவுக்கு இருக்கக்கூடிய வாய்ப்புப் பெற்றவர்களாக இருந்தால் மட்டும் அரசு பரிசீலிக்குமே ஒழிய, சாதாரணமானவர்களுக்கு குழந்தைகளைக் கொடுத்து பிற்காலத்தில் அந்தக் குழந்தையின் வாழ்க்கையைக் கெடுத்துவிடக் கூடாது என்பதிலே புரட்சித் தலைவி அவர்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அழகு இல்லாக் குழந்தைகளையும் எடுத்து வளர்ப்பதுதான் கருணை உள்ளத்திற்கு எடுத்துக்காட்டு.

வினா எண் 411, திரு.கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.